UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)
ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19 - 4 Oct - Dec 2025
Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கலித்தொகை காட்டும் சடங்குகளும் நம்பிக்கைகளும்

**திருமதி. எஸ். கவிதா**
முனைவர் பட்ட ஆய்வாளர், கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி (தன்னாட்சி), செட்டியார்பாளையம், முத்தூர், திருப்பூர் - 638105

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியம் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளம், தமிழர்களின் கருவூலம். அதைப்போன்று சங்ககால சடங்குகளும் நம்பிக்கைகளும் இன்றைய நவீன மக்களின் வழிபாட்டிற்கான தொடக்கம் மேலும், பண்பாட்டிற்கான தொடக்கம், சமூகத்தில் மக்கள் ஒருங்கினைப்பு, கூட்டு வழிபாடு, சமூகப்பாகுபாடின்மை, வீரத்தின் வெளிப்பாட்டு முனைவு, அடையாளம் இவற்றையெல்லாம் ஒருங்கிணைக்கும் மூலப்படிமம் சடங்காகும். அதனது வெளிப்பாட்டு தன்மையை ஆராய்கிறது இக்கட்டுரை.

**முதன்மைச் சொற்கள்**

பயனுறுக்கள் - கூட்டு வழிபாடு - நிகழ்த்தப்படுதல் - தர்க்க விக்கும் - குரவைக்கூத்து- வெறியாட்டு - ஏறுதழுவுதல் - காடுறையும் - அடைவூக்கம்

**முன்னுரை**

சமுதாயத்தில் மனிதன் ஒழுங்குபடுத்தி வாழ்வாங்கு வாழ்வதற்குச் சடங்குகளும் நம்பிக்கைகளும் தேவையான ஒன்றாகும். சடங்குகள் மனிதனோடு கலந்த தொன்ம அடையாளம். வாழ்க்கையில் உயர்ந்தவையாகவும், பண்பாட்டை தர்க்க விக்கும் காரண கருத்தாவாகவும் இருக்கிறது. மனிதன் தமக்குத்தாமே நெறிமுறைகளை வகுத்து வாழும்போது எக்காலத்தும், எவ்விடத்தும் இடையூறு ஏற்படாது. அத்தகைய சிந்தனைப் போக்கை சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் வழிபாட்டின் மீதும் சடங்குகளின் மீதும் கொண்டிருந்தனர். அவற்றின் பின்புலம், மனிதன் சடங்குகளை முன்னெடுப்பதற்கான காரணம், சடங்குகளால் சங்ககால மக்கள் அடைந்த பயனுறுக்கள், நம்பிக்கையின் உண்மைத் தன்மை, கூத்துக் களின் வெளிப்பாட்டு தன்மை ஆகியவற்றை இனங்கண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் மையமாகும்.

**சடங்குகள் - பொதுவரையறை**

சடங்கு என்பது நிகழ்த்தப்படுவது, திருப்திபடுத்தச் செய்யப்படுவது, நன்றிக்கடன் செலுத்துவது. வாழ்விற்கு உரிய உந்துதலைப் பெறப்பொருத்தமான நிகழ்வுகளுடன் நிகழ்த்தப் பெறுவது” என்று க.காந்தி தமிழரின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைளும், ப.303. கூறுகிறார். தனிமனிதன் குடும்பமாக வாழத்தொடங்கிய காலத்திலே சடங்குகள்

இடம்பெறத்தொடங்கின. இச்சடங்குகளை முன்னோர்கள் செய்தார்கள் அதனால் நன்மையடைந்தார்கள். அதையொற்றியே தற்காலத்திலும் கடைப்பிடிக்கப்படுகிறது.

இச்சடங்குகளுக்கான தன்மையைக் காணும் போது "சடங்குகள் பன்முகப்பட்டவை. அவை நிகழ்த்தப்படும் காலம், இடம், சூழல், தேவை, நோக்கம் போன்ற காரணிகளை முன்வைத்து வேறுபடுகின்றன. தமிழர் பண் பாட்டில் சடங்குகள் செயல் சார்ந்ததாகவே உள்ளன. அழகியல் வெளிப்பாட்டுடன் ஓர் அதீதக் கருத்துப் புலப்பாட்டினையும் வெளிப் படுத்துகிறது" பக்.183-185 என்று பக்தவத்சல பாரதி, தமிழர்மானிடவியலில் குறிப்பிடுகிறார்.

மேலும் இச்சடங்கானது இரு கூறுகளாக இயங்குகிறது. 1.சடங்கு என்பது ஒன்றைச் செய்து இன்னொன்றைப் பெறுவதற்காக நிகழ்த்தப்படுவது. 2.சடக்கு என்பது ஏதோ திடீரென்று புதிதாகக் கண்டுபிடித்துச் செய்யப் படுவதல்ல. மக்களிடம் காலங்காலமாக நிலை பெற்று அனைவராலும் அறியப்பட்ட வகையி லேயே அது நிகழ்த்தப்படுகிறது. இந்த இரண்டு கூறுகளும் தொல் தமிழர்களிடத்தில் மரபாகச் சங்க காலத்தில் இருந்து வந்தன.

## குரவைக் கூத்து வழி - திருமண நம்பிக்கை

குரவைக்கூத்து தனிநிலையில் ஆடப்படுவ தில்லை. ஒன்றினைந்து வெற்றியை வெளிப் படுத்துவதற்காகவும், சடங்குகளை வழி நடத்திச் செல்வதற்காகவும், இன்பம் கொள்வதற்காகவும் நிகழ்த்தக்கூடிய ஒரு வகை கூத்தாகும். குறிஞ்சியில் குன்றக் குரவை என்றும், முல்லையில் ஆய்ச்சியர் குரவை என்றும் அழைக்கப்பட்டது. இக் குரவை ஒன்றுக்கு மேற்பட்டோர் ஆண், பெண் பாகுபாடின்றி இன்பத்தை வெளிப் படுத்துவதற்காக ஆடக்கூடியது.

அடியார்க்கு நல்லார் குரவையின் அமைப்பைப் பற்றிக் கூறும்போது "காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபினைத்தாடுவர் என்கிறார். பொருள் ரீதியாகப் பார்க்கும்போது குன்றக்குரவை ஒரு சடங்காக இருந்தாலும் காதற் பொருளைக் கொண்டது. ஆய்ச்சியர் குரவை காதல் நிகழ்ச்சியை மீளச் செய்வது ஆகும் என்கிறார் க.சிவத்தம்பி.

இச்சடங்குகள் மக்கள் மீது கொண்ட நம்பிக்கையால் வேரூன்றியது. தெய்வ வழிபாட்டிற்காக "எல்லா வல்ல இயற்கைச் சக்தியாகிய பஞ்ச பூதங்களை எண்ணி அவை மனிதனை ஆட்டிப் படைக்கும் போது அச்சத்தால் வணங்கி வரப்பட்டது. தனக்கு நன்மை தரவேண்டியும் சடங்குகள் நடத்தப் படுகின்றன." என்று க.இராசமணிக்கம், பண்டைய தமிழர் வாழ்வியல் எனும் நூலில் கூறுகிறார். அந்த வகையில் குறிஞ்சி நிலத்தில் தனிப்பட்ட ஒரு பெண்ணிற்காக ஊர்மன்றத்திலோ அல்லது மரத்தின் அடியிலோ வைத்து குறிகேட்டு சடங்குகள் நடத்தப்பட்டன. அவ்வாறு நடத்தப்பட்ட சடங்கு வேலன் வெறியாட்டு ஆகும். வேலன் வெறியாட்டு நிகழ்த்திய பின்பு குரவைக் கூத்தும் நிகழ்த்தப்பட்டன. இதனை கலித்தொகைப் பாடல்கள் வாயிலாகவும் அறியமுடிகிறது.

தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தில் இருப்பதை அறிந்த தலைவியின் தந்தை, தாய், தமையன் முதலானோர் திருமணத்தி ற்கு மறுப்பு தெரிவிக்கும்போது தலைவி அறத்தோடு நிற்கச் செய்கிறாள். அதனது வெளிப்பாடே தலைவிக்காகச் சடங்குகள் நிகழ்த்த வேண்டிய நிலைக்கு தந்தை, தாய் தள்ளப்படுகிறார்கள். இவை மட்டுமின்றி தலைவனும் தலைவியும் குரவைக்கூத்து ஆடி மலையில் உறையும் தெய்வத்தை வணங்குவதால் திருமணம் நிகழப்பெறும் என்ற நம்பிக்கையும் சங்க காலத்தில் மக்களது வழக்கத்தில் இருந்துள்ளது. இதனை,

**நெறியிழாய் நீயும் நின்கேளும் புணர**

**வரை உறை தெய்வம் உவப்ப உவந்து**

**குரவை தழீஇ யாம் ஆட** (கலி.39.26-28)

என்பதைக் குறிஞ்சிக்கலி வாயிலாக அறியமுடிகிறது. சங்ககாலத்தில் திருமணம் எனும் சடங்கு நிறைவுற காடுறை தெய்வங்கள் அமைந்திருக்கும் நீர்த்துறை, பழைய ஆலமரம், மாமரம் ஆகியவற்றில் உறைந்திருக்கும் தெய்வங்களை வணங்கி குரவைக்கூத்து நிகழ்த்தப் பெற்றால்

தனிமனித வாழ்வியல் சார்ந்த நம்பிக்கை வெற்றியடையும் என்ற நம்பிக்கை உருவாகி இருப்பதை உணரமுடிகிறது.

குறிஞ்சி நிலத்தில் களவொழுக்கத்தில் நின்ற தலைவன், தலைவியின் அறவொழுக்க மானது கற்புறமாற வெறியாட்டு நிகழ்த்தி பின்பு குரவைக் கூத்து வழியாக நிறைவு பெற்றது. ஆனால் முல்லை நிலத்தில் களவொழுக்கத்தை வதுவையாக மாற்ற தலைவன் ஏறுதழுவி வெற்றியடைந்து குரவைக்கூத்து நிகழ்த்தியுள்ளான். இதனை,

**தண்ணுமைப் பாணி தளராது வழூஉக**

**பண்ணமைஇன் சீர்க் குரவையுள் கண்ணி**

**தின்தோள் திறல்ஒளி மாயப்போர்**

(கலி.102.34-36)

என்கிறது கலித்தொகை. ஏறுதழுவுதல் ஆணின் வீரத்தை அடையாளமிடுவதற்காக வும், பெண்கள் வீரத்தை சிறப்பாக மதித்துள்ளனர். இருப்பினும் காளைகளை அடக்காத வீரனின் தோள்களை மறுபிறப்பி னும் பெண்கள் தழுவக் கடவாளாக இருந்துள்ளனர். இதனை,

**விலை வேண்டார் எம்இனத்து ஆயர் மகளிர்**

**கொலை ஏற்றுக் கோட்டிடை தாம் வீழ்வார் மார்பின்**

**முலையிடைப் போல புகின் ஆங்கு**

**குரவை தழீஇ யாம் மரபுளி பாடி**

**தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்**

**மாசுஇல் வான் முந்நீர்ப் பரந்த தொல் நிலம்**

(கலி.103.71-77)

என்று கலித்தொகைப் பாடல் கூறுகிறது. ஏறுதழுவியதால் தலைவன் மீதிருந்த அலர் போயிற்று. தலைவனின் வீரம் நிரூபிக்கப் பட்டது. குரவைக்கூத்தும் நடத்தப்பட்டு திருமண ஏய்ப்பும் நடந்தேறியது.

**ஒருக்கு நாம் ஆடும் குரவையுள் நம்மை**

**அருக்கினான் போல் நோக்கி அல்லல் நோய் செய்தல்**

**குரூஉக் கண் கொலை ஏறு கொண்டேன்**

(கலி.104.74-76)

மானிடவியலர் கருத்துப்படி ஒன்றைச் செய்வதன் மூலம் மற்றொன்றை நிறைவுற முடிக்க முடியும் என்றும் அவை பெரும் பாலும் சடங்குகளில் அதிகம் கடைப்பிடிக்கப் படுகிறது. தலைவன் ஏறுகளை அடக்கியதைக் கண்ட தலைவி இனி நமது சுற்றத்தார் என்னைத் தலைவனுக்குக் கொடுப்பதாக உறுதி கொள்வர். வதுவையும் விரைவில் நிறை வேறும் என்று எண்ணியதோடு குரவைக் கூத்து நிகழ்த்தியும் திருமாலைப் போற்றவும் செய்துள்ளனர். இதனை,

**மலர் அணி கண்ணிப் பொதுவனொடு எண்ணி**

**அலர் செய்துவிட்டது இவ் ஊர்?**

**இன்று எவன் என்னை எமர் கொடுப்**

(கலி.105.64-66)

என்கிறது. குரவைக்கூத்து நடத்தியதைப் போன்று திருமால் வழிபாடு காடுறையும் ஆயர்களால் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. தொல்காப்பியர் "**மாயோன் மேய காடு உறை உலகமும்**" (தொல்.பொரு.அகம்.நூ.5) என்று முல்லைநிலத்தையும், மக்களையும் ஒற்றியே கட்டமைத்துள்ளது தெரியவருகிறது.

அறத்தோடு நிற்றல், குரவைக் கூத்து நிகழ்த்துதல், வெறியாட்டு நடத்துதல், முருக வழிபாடு, திருமால் வழிபாடு இவையனைத் தும் சங்ககால குறிஞ்சி, முல்லை நில மக்களின் மரபார்ந்த நம்பிக்கை அடையாள மாக இருந்தாலும் தனி ஒரு ஆண், பெண் மனங்களுக்குள் ஆசை அடைவூக்கம் அடையாத பொழுது மேற்சுட்டிய செயற்பாடு களைச் செய்ய வேண்டிய முகமைக்கு உட்படுகின்றனர். அவ்வாறு செய்த பின்பு அவை இருமணம் இணைந்த கற்புவாழ்க்கை யாக மாற்றம் கொள்கிறது. இதனை உணர்த்தும் விதமாக

**திருநுதல் அயத்தார் தம்முன் புணர்ந்த**

**ஒருமணம் தான் அறியும் ஆயின் எனைத்தும்**

**தெருமரல் கைவிட்டு இருக்கோ அலர்ந்த**

**விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்**

**அரு நெறி ஆயர் மகளிர்க்கு**

**இருமணம் கூடுதல் இல் இயல்பு அன்றே?**

(கலி.114.16-21)

என்று திருமணத்திற்கான நிறைவை கொண்டு வாழ்க்கையானது அமைந்துள்ளது என்பதை உணரமுடிகிறது.

### தெய்வத்தை வணங்குதல்

முல்லை நிலத்தைப் பூர்வீகமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் ஆயர்கள். ஏறுதழுவதற்கு முன்பாகத் தெய்வங்களை வணங்கும் மரபு இம்மக்களிடத்தில் தொடர்மரபாக இருந்து ள்ளது. ஏறுதழுச் செல்லும் பொதுவர்கள் காயா, செங்காந்தாள், முல்லை போன்ற மலர் களை மாலையாகத் தொடுத்து நீர்த்துறை யின் ஆலமரத்தின் கீழ் வீற்றிருக்கும் மிகவும் பழமையான ஊர்த்தெய்வத்தை வணங்கி பின்பு ஏறுதழுவச் சென்றுள்ளனர். இதனை,

**துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்**

**முறையுளி பரர்அய் பாய்ந்தனர் தொழூஉ**
(கலி.101.13-14)

என்ற பாடல் வரிகள் சுட்டிக்காட்டுகிறது. அதனைப்போன்று பாலை நிலத்தில் தலைமகன் பொருளீட்டுவதற்காகப் பிரிந்து செல்கிறான். அவன் சென்றவழி கடுமையான சுரம், வெயில் நிரைந்தது. அத்தகைய வழி யில் செல்லும் தலைவனுக்கு எந்த விதமான துன்பமும் நிகழாதிருக்க ஐம்பூதங்களான, காற்று, மழை, வெயில் தெய்வங்களை தலைவி வணங்க முற்படுகிறாள். இதனை,

**முளி முதல் மூழ்கிய வெம்மை தீர்ந்து உறுக என**

**வளி தரும் செல்வனை வாழ்த்தவும் இயைவதோ?** (கலி.16.15-16)

என்று காற்றுக் கடவுளை வணங்கி வழிபட்டுள்ளனர். ஆலமரத்தின் வீற்றிருக்கும் காவல் தெய்வம், காற்று தெய்வம் இவையிரண்டும் பண்பாட்டோடு தொடர்பு கொண்டு இயங்கும் தெய்வங்களாகச் சங்க காலத்தில் இருந்துள்ளது தெரியவருகிறது.

### எருமைக் கொம்பு நட்டு வழிபடுதல்

முல்லைநில ஆயர்களின் தெய்வம் திருமாலாக இருந்தாலும் அவர்களின் குலதெய்வ விலங்காக எருமை, காளை இவைகளையே திருமணச் சடங்கு, குரவைக் கூத்து, காடுறை வழிபாடு இவைகளில் முன்னிருத்தி வழிபட்டுள்ளனர். திருமணத்தின் போது வீட்டின் முன்பு புதுமணல் பரப்பி, செம்மண் பூசி, அழகுபடுத்துவர். மேலும் பெண் எருமையின் கொம்பை வீட்டினுள் நட்டு வைத்து எமர் பெருமணம் எடுப்பது ஆயர்தம் குலவழக்கத்தைக் காட்டுகிறது. இதனை,

**தருமணல் தாழப்பெய்து இல் பூவல் ஊட்டி**

**எருமைப் பெடையோடு எமர் ஈங்கு அயரும்**

**பெரு மணம் எல்லாம் தனித்தே ஒழிய**
(கலி.114.11-13)

என்ற பாடல் மூலம் விளங்க முடிகிறது. இவ்வழக்கம் இனக்குழு மரபாகச் சங்க காலத்தில் இருந்துள்ளன. தொடக்க காலத் தில் நிலம் சார்ந்த தெய்வம் முன்னின்று பேசப்பட்டுள்ளது.

1. விரிச்சிகேட்டல் இல்லுரைத் தெய்வத்திற்கு நெல்லும், மலரும் தூவி வழிபட்டு வந்துள்ளனர்.
2. பொதுவர்களின் குடல் வீரத்தின் அடை யாளமாக இருந்தாலும், ஆலமரத்தின் அடியிலுள்ள தெய்வத்திற்கு மாலையாகப் படைக்கப்பட்டுள்ளது.
3. எருமையின் கொம்பு திருமண வீடுகளில் நட்டு வழிபாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் முல்லை நில மக்கள் தெய்வத்திற்குப் பலிகொடுத்து வழிபடும் குலக்குறி மரபைக் கொண்டிருந்தது தெரிய வருகிறது.

### பல்லி - நிமித்தம் பார்த்தல்

மக்கள் பேசும் வாய்ச்சொல் கொண்டு நிமித்தம் பார்க்கும் மரபைப் போன்று பல்லி சொல்லும் குறிகளைக் கொண்டு மக்கள் நன்நிமித்தம் பார்த்தனர். சங்ககாலம் தொட்டே இவ்வழக்கம் பழக்கத்தில் இருந்து வருகிறது. தொல்காப்பியர் இதனை **மன்னும் நிமித்தம்** (தொல்.நூ.982) என்றும், **"புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்"** (தொல்.நூ.1087) கூறுகிறார். அதைப்போன்று பெண்களுக்கு இடக்கண்ணும் ஆண்களுக்கு வலக்கண்ணும் துடித்தல் நன்னிமித்தம் ஆகும். மாறித் துடித்தல் தீ நிமித்தம் ஆகும். இது வாழ்க்கையோடு கூடிய மனிதனுக்குள் நிகழும் நம்பிக்கையாகும். இதனைக்

கலித்தொகைப் பாடல் உறுதி செய்கின்றன.

**இனைநலம் உடைய கானம் சென்றோர்**
**புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்**
**பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன**
**நல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே**
(கலி.11.19-22)

இப்பாடலில் தலைவனைப் பிரிந்த நிலையில் தலைவி அவன் சென்றது முதல் ஒவ்வொரு நாளும் சுவரில் குறியிட்டு அதனை நாள்தோறும் எண்ணி வருத்தத்துடன் வாழ்கிறாள். வருத்தத்தின் காரணமாகத் தன் முன் கையைக் கன்னத்துடன் சேர்த்து ஊன்றிக்கொண்டு படுக்கையில் பிரிவு எண்ணி அழுது வருந்துகிறாள். இந்நிலையில் அவளது துயரத்தை நீக்குவதைப் போலப் பல்லி ஒலித்ததாம். அச்சொல் அவளுக்கு ஆறுதலைத் தந்ததாம். இங்கு பல்லியின் சொல் நன்னிமித்தமாக கணவன் வருகையை உறுதி செய்வதாக அமைந்துள்ளன.

**பேய் நம்பிக்கை**

தலைவன் தலைவியைச் சந்திக்கும் இரவு வேளையில் ஆண் பிசாசு போல் தோற்றம் கொண்டு சந்திக்க விளைகிறான். தலைவி அவனது தோற்றத்தைக் கண்டு என்னை நீ ஏற்காவிடில் உன்னை வஞ்சிப்பேன் என்றதும் அவனது உடல் மேல் மணலை அள்ளி எரிந்து விட்டு ஊரெல்லாம் கேட்குமாறு கூப்பிடத்தொடங்கினாள். இதனை,

**கைப்படுக்கப் பட்டாய் சிறுமி நீ மற்று யான்**
**ஏனைப் பிசாசு அருள் என்னை நலிதரின்**
**இவ் ஊர்ப்பலி நீ பெறாஅமல் கொள்வேன்**
**எனப் பலவும் தாங்காது வாய்ப்பாடி நிற்ப**
(கலி.65.16-19)

என்கிறது. இதன் பின்னணியில் சங்க காலத்தில் இரவு நேரத்தில் கறும்பூதம் போன்று மக்கள் நடமாடுவதும், அவ்வாறு நடமாடும் ஆண் அல்லது பெண் காமத்தினை நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதை விளங்காமல் ஊரார் பேய் உலாவுவதாக நம்பிக்கை கொண்டிருந்தது தெரிகிறது.

**முடிவுரை**

பண்பாட்டில் சடங்குகள் மனிதனது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. சடங்குகள் வழியாகத் தனிமனித நம்பிக்கைகள் நிறைவுறும்போது அவை சமூகவயப்பட்டதாக மாற்றம் பெறுகிறது. சடங்குகளால் இனக்குழு மக்களிடத்தில் நிகழ்த்தப்பெறும் தொன்ம வழிபாட்டு முறைகள், கடவுளின் அடையாளங் கள், குரவைக்கூத்து, வெறியாட்டு போன்ற நம்பிக்கை சார்ந்த வழிபாட்டு முறைகள் பொதுமையாக்கம் பெறுகிறது. குறிஞ்சி நிலத்திற்கே உரித்தான குன்றக்குரவை, முல்லை நிலத்திற்குரிய ஏறுதழுவுதல், வெற்றியின் அடையாளமாக குரவகைக்கூத்து நிகழ்த்துதல், ஆலமரத்திற்கு கீழ் குடி கொள்ளும் தெய்வத்திற்கு வழிபாடு செய்தல், திருமண வீடுகளில் எருமையின்கொம்பினை நட்டு வைத்து வழிபாடு செய்தல் ஆகிய அனைத்தும் பண்பாட்டில் பொதுவிதப் படுகிறது. இதனால் தொல்தமிழர்களின் மரபுவயப்பட்ட சடங்குகள் நம்பிக்கைகள் அனைத்தும் நவீன மாற்றம் பெறுவதற்கு ஏற்புடையதாகத் திகழ்கிறது.

**துணைநூற்பட்டியல்**

1. விசுநாதன்.அ (உரை), கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை -098, முதல்பதிப்பு-2004.
2. இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல், நூ.982, கழக வெளியீடு, சென்னை-02.
3. சிவத்தம்பி. க, பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம், ப.338,குமரன் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு-2005.
4. பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல், பக்.183-185.அடையாளம் வெளியீடு, திருச்சி.10. முதற்பதிப்பு-2002.
5. இராசமணிக்கம். க, பண்டைய தமிழர் வாழ்வியல், தமிழ்க்குடில் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு-2006.